**மாங்காடு நகராட்சி**

**நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 10.01.2025ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்

குறள்- தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு..

## குறள் விளக்கம் :

மணலில் தோண்டிய அளவு சிறு குளத்தில் நீர் ஊறும்; மக்கள் கற்ற அளவே அறிவும் வளரும்.

—***-----

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் டிசம்பர் 2024 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான டிசம்பர் 2024 மாதத்திற்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

இந்நகராட்சிப் பகுதிகளில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த தெருவிளக்குகளில் மின் சிக்கனம் கருதி அவற்றை 2274 எண்ணிக்கையிலான LED மின் விளக்குகளாக மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சிப்பகுதிகளில் புதியதாக ஏற்படுத்தப்பட்டு வரும் மனைப்பிரிவுகளில் குடியிருப்புகள் அதிகளவில் வேகமாக உருவாகி வரும் நிலையில் தெருமின் விளக்கு வசதிகள் இல்லாத காரணத்தினால் பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. மேலும் மேற்படி தெருமின் விளக்கு வசதி இல்லாத இடங்களில் சில சமுக விரோத செயல்கள் நடைபெறுவதாகவும் அவ்வப்போது காவல்துறை மூலம் நடவடிக்கள் மேற்கொள்ளப்படுவதால் பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிலும் நகராட்சி அலுவலகத்தில் நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் முறையே நகர்மன்ற கூட்டத்தின் போது உறுப்பினர்கள் புதிய தெருமின் விளக்குகள் பொருத்தி தருமாறு கோரியுள்ளதை தொடர்ந்து நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் ஆகியோர் மேற்படி தெருமின் விளக்குவசதிகள் இல்லாத இடங்களில் புதிய LED தெருமின் விளக்குகள் அமைக்க அறிவுறுத்தியுள்ளனர். எனவே பொதுமக்களின் அடிப்படை வசதிகளை கருத்தில்கொண்டு தற்போது தெருமின் விளக்கு வசதி இல்லாத மின் கம்பங்களில் 250 எண்ணிக்கையிலான 40W LED மின் விளக்குகள் மற்றும் கிளாம்ப் செட்டுகள், GI பைப்புகள் பொருத்தவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.18.50 இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினைக் கருத்திற்கொண்டும், புதியதாக ஒருவாகி வரும் மனைப்பிரிவுகளில் இருந்து அடிப்படை வசதி பணிகளுக்காக கட்டமைப்புகள் கோரப்பட்டுள்ளதால் மேற்கண்ட புதிய LED மின் விளக்குகளை பொருத்த மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

## பொருள் எண்.5

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் (Ambient Air Quality Grant for Urban Agglomeration) 15வது நிதிக்குழு மானியம் 2023-24 ஆண்டிற்கான ஊக்கத்தொகையின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28, அவர்களின் கடிதம் ந.க.எண்.11919/2024/EA-2, நாள்.16.12.2024ன்படி கீழக்காணும் சாலை பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 07.01.2025 அன்று பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுதொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளிஅளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.9, அம்மன் நகர் 1வது தெரு,2வதுதெரு, 3வது தெரு, 4வது மற்றும் 5வது குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 11.50 | 1.திரு.எம்.என் பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட0.11% குறைவு |
| | | | 2.திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஷ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட0.86% அதிகம் |

அலுவலக குறிப்பு :–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) மேற்படி பணிகளுக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எம்.என்.பாலசுந்தரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

பொருள் எண்.6

இந்நகராட்சியில் 2024 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையின் போது மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நிவாரண மையத்தில் தங்க வைக்கப்பட்டனர். மேலும் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உரிய தூய்மை பணிகளை மேற்கொள்ள அருகாமையில் உள்ள திருநின்றவூர், பூவிருந்தவல்லி, திருவேற்காடு, குன்றத்தூர் கூடுவாஞ்சேரி, திருவள்ளூர் மற்றும் மறைமலை நகர் ஆகிய நகராட்சிகளிலிருந்து கூடுதலாக தூய்மை பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. எனவே நிவாரண மையத்தில் தங்க வைக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு No Food Waste நிறுவனத்தின் மூலம் உணவு சப்ளை செய்யப்பட்டது. எனவே மேற்படி நிறுவனம் உணவு சப்ளை செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ. 32000/-ஐ பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மேற்படி பட்டியல் தொகையை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.7

இந்நகராட்சியில் 2 வது வார்டு எல்லைக்குட்பட்ட ரகுநாதபுரம் பகுதியில் புதியதாக அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சுகாதார நிலையத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) ஆரம்ப துணை சுகாதார நிலைய கட்டட பயன்பாட்டின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற ம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.8

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4,6,8,9,15,17 முதல் 20, 23 மற்றும் 27 வார்டு பகுதிகளில் ஆங்காங்கே குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்கப்படாத காரணத்தினால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்க இயலவில்லை. எனவே மேற்படி பகுதிகளில் உள்ள விடுபட்ட இடங்களின் குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்கவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.7.90 லட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) குடிநீர் விநியோக பணியின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற ம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.9

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை 2024 ன் படி பெய்த பெருமழையினால் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை சூழ்ந்து தேங்கிய மழைநீரினை நகராட்சிக்கு சொந்தமான டீசல் மோட்டார் மூலம் மழைநீர் வெளியேற்றப்பட்டது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான உயர்மின் மோட்டார்களை இயக்கிட தேவையான டீசல் ஜெனரேட்டர்கள் வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தி நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி டீசல் மோட்டார்கள் மற்றும் ஜெனரேட்டர் இயக்கத்திற்கு தேவையான டீசல் கொள்முதல் செய்தற்கான தொகை ரூ .4,05,062/-ஐ திருவாளர்.தில்லை நடராஜா ஏஜென்சி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) வெள்ள நிவாரண பணியின் அவசர அவசியம் கருதியும், மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற ம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.10

மாங்காடு நகராட்சி, மெயின் ரோடு மாங்காடு "ஆ" கிராமம், OSR-1 சர்வே எண்.389/2PART, மற்றும் OSR-4 சர்வே எண்.391 PART & 392 PART M/s.Cybercity Builders & Developers Private Limited, சார்பாக 31.12.2024 அன்று அளித்துள்ள கடிதத்தில் திறந்தவெளியிடங்களை (OSR- &OSR-4) அவர்களாகவே பராமரித்துக் கொள்ள கோரியுள்ளார்கள்.

எனவே சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் அனுமதி பெற்ற திட்ட அனுமதி எண்.C/PP/MSB/53(S-1/S-69)/2017, நாள்.09.12.2017, கட்டிட அனுமதி எண்.138/2018, நாள்.10.01.2018. OSR-1 தானப்பத்திரம் எண்.15669/2017, நாள்.30.10.2017, **பரப்பு 989.90ச.மீ** மற்றும் OSR-4 தானப்பத்திரம் எண்.6875/2016, நாள்.07.03.2016, **பரப்பு 3143.20ச.மீ.** எனவே மேற்காணும் திறந்த வெளியிடங்களை (OSR-1 & OSR-4) **M/s.Cybercity Builders & Developers Private Limited**, மூலம் பராமரித்துக் கொள்ள கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. தற்காலிகமாக அனுமதி வழங்கிய திறந்தவெளியிடத்தை எதிர் காலத்தில் எவ்விதமான உரிமையும் கோரக்கூடாது.
2. திறந்தவெளியிடத்தை பூங்காவை தவிர வேறுப்பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தக் கூடாது.
3. திறந்தவெளியிடம் தொடர்பான பராமரிப்பு பணிகள் தங்களது சொந்த செலவில் மேற்கொள்ளப்பட வேண்டும். தங்கள் நிறுவனம் மூலம் கூடுதலாகமேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் முறையே நகராட்சியில் அனுமதி பெற வேண்டும்.
4. திறந்தவெளியிடத்தை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். நுழைவு கட்டணம் எதுவும் வசூலிக்கக்கூடாது.
5. திறந்தவெளியிடத்தில் எவ்வித விளம்பரங்களும் செய்ய கூடாது.
6. திறந்தவெளியிடத்தை பராமரிப்பிற்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. எவ்விதமான உரிமையும் கோரி நீதிமன்ற நடவடிக்கைகள் நகராட்சிக்கு எதிராக தொடரக்கூடாது.
7. திறந்தவெளியிடம் வளாகத்தில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் புகையிலைப் பொருட்கள் அனுமதிக்க கூடாது. அதன் அறிவிப்பினை பொதுமக்களுக்கு தெரியும் இடங்களில் வைக்க வேண்டும்.
8. திறந்தவெளியிடத்தில் பொது மக்களின் பாதுகாப்பிற்காக போதுமான பாதுகாவலர்கள் மற்றும் பராமரிப்பு பணியாளர்கள் பணி அமர்த்த வேண்டும்.
9. மின்சாதன பொருட்கள் அருகில் இருக்கும் பட்சத்தில் பொது மக்களின் பாதுகாப்பிற்காக போதிய இடைவெளி இருப்பதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.
10. திறந்தவெளியிடத்தில் அசம்பாவிதம் ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அசம்பாவிதம் ஏதேனும் ஏற்பட்டால் அதற்கு தங்கள் நிறுவனம் முழு பொறுப்பாகும்.
11. அனுமதிக்கப்பட்ட பராமரிப்பு காலம் முடிவடையும் நீட்டிப்பு தேவைப்படின் நகராட்சிக்கு விண்ணப்பித்து முறையே புதுப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அனுமதி காலம் முடிவடைந்தவுடன் நகராட்சியால் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
12. மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் வழங்கப்படும் அனுமதியினை முன் அறிவிப்பின்றி நகராட்சியால் ரத்து செய்யப்படும்.
13. மேற்காணும் நிபந்தனைகளை மனுதாரர் ஒப்புக்கொண்டு நகராட்சியிடம் ஒப்புதல் முத்திரை தாளில் எழுதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
14. நகராட்சியின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நிபந்தனைகளின் படி அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:-** அனுமதி அளிக்கலாம்.

பொருள் எண்.11

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது., மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 31.12.2024 உடன் முடிவடையவுள்ள நிலையில், மேற்படி பணிக்கு 31.12.2024 அன்று புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அவ்வாறு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு முறையே ஒப்பந்த்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணி உத்தரவு வழங்க ஏற்படும் காலம் வரை டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதியும், பணியின் அவசியத்தினை கருதியும் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் வரை ஜனவரி 2025 ஒரு மாத காலத்திற்கு மட்டும் தற்போது பணி செய்து வரும் ஒப்பந்த நிறுவனம் மூலம் பணியினை தொடரவும் அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :— பொது பணிகளின் பொது சுகாதாரத்தினை கருதி பணியினை தொடரவும் செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.12

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணிக்கு கொசு புகை ஒழிப்பு தெளிப்பான இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் இயந்திரம் அவ்வப்பொழுது பழுதடைந்து வருவதால் அடிக்கடி பழுது நீக்கம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. இந்நகராட்சி சிறப்பு நிலை பேரூராட்சியாக இருந்து தற்போது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் புதியதாக கொசு புகை ஒழிப்பு தெளிப்பான பெரிய இயந்திரம் ஒரு எண்ணிக்கையும், சிறிய இயந்திரம் இரண்டு எண்ணிக்கையும் கொள்முதல் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :—

பொது பணிகளின் பொது சுகாதாரத்தினை அவசர அவசியம் மேற்படி கொசு புகை ஒழிப்பு தெளிப்பான் கொள்முதல் செய்வதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.13

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நகரமன்ற உறுப்பினர்கள் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை அரசு/ பொதுநிதியின் கீழ்

மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் |
|---|---|
| 1 | வார்டு எண்.3 க்கு உட்பட்ட பிரியம் அவென்யூ, மெயின்ரோடு மற்றும் ஸ்ரீ நகர் சாலையை உயர்த்தி தார் சாலை அமைத்தல் பணி |
| 2 | 1)வார்டு எண்.1ல் உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் திருவள்ளுவர் சிட்டி பகுதியில் பூங்கா மேம்பாடு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி<br>2) 1வது வார்டு பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் சுத்திகிரிப்பு நிலையம் அமைத்தல் பணி |
| 3 | 17 வது வார்டுக்கு உட்பட்ட பகுதியான மாரியம்மன் கோயில் தெருவில் கல்வெர்ட் உயர்த்தி மழைநீர் வடிகால் அமைத்தல் பணி |
| 4 | வார்டு எண்.6ல் அமைந்துள்ள அடிசன் நகர், ராகவேந்திரா தெரு, சீதாராமபுரம் ஹரிணி இமாலயா தெரு, அருள்ஜோதி வள்ளலாளர் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சாலைகள் அமைத்தல் |
| 5 | வார்டு எண்.6 ல் உள்ள இராமகிருஷ்ணா அவென்யூ, அம்பாள் நகர் 1 ,2,3,4 வது தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்தல் |
| 6 | கிழக்கு காமாட்சி அம்மன் நகர் 5வது குறுக்கு தெருவில் சாலையை உயர்த்தி அமைத்தல் |
| 7 | மாங்காடு நகராட்சி பகுதியில் முடிவு எல்லை என குறிப்பிட்டு பலகை அமைத்தல் |
| 8 | ஸ்ரீ கணபதி நகர் தார் சாலை அமைத்தல் |
| 9 | 23 வது வார்டு மேல் தெரு2,3,4, தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் மேல்தெரு பிரதான சாலை மற்றும் கே.கே. நகர் பிரதான சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் |

**பொருள் எண்.14**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட நரிவனம் சாலையில் உள்ள பழங்குடியின மக்கள் வசித்து வரும் குடியிருப்பு பகுதியில் உயர் அழுத்த மின் கம்பி செல்வதால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. எனவே அப்பகுதியில் வாழும் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி உயர் அழுத்த மின் கம்பியினை பூமிக்கடியில் புதைவடமாக எடுத்து செல்ல மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பி பெறப்படும் மதிப்பீட்டினை ஏற்று மின் வாரியத்திற்கு பட்டியல் தொகையினை செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.15**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவ மழை 2024 மற்றும் ஃபெஞ்சல் புயலின்போது பெய்த பெரு மழையினால் நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு தெருக்களில் மழைநீர் தேங்கியதால் சாலைகளில் ஆங்காங்கே பள்ளங்கள் ஏற்பட்டு போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்த சாலைகளில் நிரந்தரமாக செப்பனிடுவதற்கு முன் தற்காலிகமாக பள்ளங்கள் சீர்செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. எனவே நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட விவரப்படி பழுதடைந்த சாலைகளை

தற்காலிகமாக WMM சீரமைக்கவும் அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ( ரூ.லட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள நகராட்சி சாலைகளில் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைத்தல் | 9.50 |
| 2 | வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள நகராட்சி சாலைகளில் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைத்தல் | 9.50 |

அலுவலக குறிப்பு-

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பழுதடைந்த சாலைகளை தற்காலிகமாக செப்பனிடவும், செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.16

மாங்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் உரமாக தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளில் மறுசுழற்சி செய்யக்கூடிய குப்பைகள் மறுசுழற்சி செய்ய அனுப்பப்பட்டுள்ளது. குப்பைகளை தரம் பிரித்தது போக அனைத்தும் கலந்த பிரிக்க இயலாத குப்பைகள் உரக்கிடங்கு பகுதியில் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்த குப்பைகள் சேகரிக்கப்படும் இடத்தில் சுடுகாடு மயானம் உள்ளது. இந்த சுடுகாடு பகுதிக்கு செல்லவழி இல்லாமல் குப்பைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் அருகில் Electricity Board உள்ளது. இதனால் அங்கு சேர்ந்துள்ள குப்பைகளை அவசர அவசியம் கருதி அகற்றப்படுதல் வேண்டும். எனவே இந்த இதர கழிவுகளை அகற்றும் பணி மேற்கொள்ள 27/11/2024 விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | விலைப்புள்ளிஅளித்த நிறுவனத்தின் விவரம் | வரப்பெற்ற விலைப்புள்ளி | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | | 1)திருவாளர்.எம்.எஸ்.ஆர்.எர்த் மூவர்ஸ் | 12000/- | குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வளம் மீட்பு பூங்காவில் தரம் பிரிக்க இயலாத மீதமுள்ள குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ளுதல் | 2)திருவாளர். ஆர். எம். டிரான்ஸ்போர்ட் | 12150/- | **அதிகம்** |
| | | 3) திருவாளர். எஸ்.ஆர்.வி. எர்த் மூவர்ஸ் | 12100/- | **அதிகம்** |

**அலுவலக குறிப்பு:-**

**மேற்படி பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் பார்வையிட்டு பதியலாம்.**

**நகரமன்ற தலைவர்**

**மாங்காடு நகராட்சி**